முருகப்பெருமான் துணை

**மகான் முருக நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.08.2022, புதன்கிழமை

1. அருட்குருவே அரங்கமகா தேசிகனே
அவதாரம் கலியினில் எடுத்து
அருட்சுடராக அருளும் ஞானியே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது யாளி திங்கள்
குறைவிலா முதல்திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 01 நாள், 17.08.2022 புதன்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு முருக நாயனார் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உண்மை வழிகாட்டும் அரங்கன்
ஞானமே கலியின் சிறந்த மார்க்கம்
நம்பிக்கை வைத்து மக்களெல்லாம் அடிபணிய
4. பணியவே பெரும் பாதுகாப்பு
பாடிடுவேன் சகல வகையும்
துணிவும் தூயமனமும் கூடி
தெளிவுதிடம் யாவர்க்கும் காணும்
5. காணவே அரங்கன் வழிவர
கட்டுப்பாடும் நல்லொழுக்கமும்
ஞானவான் எனும் மேல்நிலையும்
நாட்டிடுவேன் தொடர்ந்து வரக்கிட்டி
6. கிட்டியே எங்கும் எதிலும்
குருவருள் துணை பெருக
தட்டாது காரிய சித்திகளும்
தன தேட்டு வளமும் கூடி
7. கூடியே நல் இல்லறத்தானாக
குவலயம் காக்கும் சமூக அக்கறை
கூடியே உயர்ந்து நிற்பர்
குருபரனை வணங்கும் ஞானம்
8. ஞானமும் நல் அறிவும் கூடி
ஞானிகளாகும் வண்ணம்
தானாக சக்தி பெருக்கமும்
தவராஜன் வழிவர அடைவர்
9. அடையவே அரங்கன் காட்டும்
ஆற்றல் மிக்க அன்னதானமதை
தடையற சேவை வழியாக
தரணியோர் தொடர்ந்து வந்து

10. வந்துமே பொருளுதவி செய்து
வகைபட சேவை ஆற்றி
சிந்தை முழுக்க தருமபலம்கூட
சித்திகளும் மிகுதி ஆகி இனிதே
11. இனிதே ஞானவான் பெருகி
இயம்பிடுவேன் ஞான ஆட்சி படைப்பர்
கனிவேலவன் தலைமை ஏற்பர்
கண்டுரைத்த அருளாசி முற்றே

–சுபம்–